இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 180 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 27 – செவ்வாய்க்கிழமை 10 பிப்ரவரி 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 180 : Thiruvalluvar Year - 2057 - Thai 27 - Tuesday 10 February 2026 - Madurai 12 Pages ₹ 5.00


அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு

## எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு!

### மக்களவை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப். 10 -

அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருவதால் நாடாளுமன்றம் நேற்றும் முடங்கியது.

நாட்டின் பலகோடி விவசாயிகளை பாதிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்திய விவசாயிகளுக்கு எதிரான இந்த ஒப்பந்தம் குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்திருந்தார்.



இந்நிலையில், மக்களவை கூடியதும், இவ்விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என டி.ஆர்.பாலு வலியுறுத்தினார். இந்த ஒப்பந்தம் இந்திய விவசாயிகளுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்றும் டி. ஆர்.பாலு தெரிவித்தார்.

இதே கோரிக்கையை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் இதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டார். இதனால், காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தங்களது கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர். இதனைத் தொடர்ந்து மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து வலியுறுத்தினர். இதனைத் தொடர்ந்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

---

### இன்னும் பல திட்டங்களைச் செய்து கொடுத்து

# தூய்மைப் பணியாளர்களுக்கு என்றும் துணையாக இருப்போம்!

## பணியாளர்களின் ‘பசி போக்கும்’ திட்ட விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, பிப். 10-

**“இன்னும் பல திட்டங்களைச் செய்து கொடுத்து தூய்மைப் பணியாளர்களுக்கு என்றும் துணையாக இருப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்தியாவிலேயே முதன்முறையாகத் தூய்மைப் பணியாளர்களின் பசி போக்கும் திட்டம்!

2025 நவம்பரில் சென்னை மாநகராட்சியில் 29,455 பணியாளர்கள் பயன்பெறத் தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் காண்கிறது.

மீதமுள்ள,

* 24 மாநகராட்சிகளில் 48,768 பேர்,

* 145 நகராட்சிகளில் 29,556 பேர்,

* 479 பேரூராட்சிகளில் 21,910 பேர்

என மொத்தம் 1,29,689 தூய்மைப் பணியாளர்களுக்கும் அவர்களது பணிவேளையில் உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

தூய்மைப் பணியாளர்களுக்கு வீடு, தொழில் முனைவோராகக் கடனுதவி, ஆயுள் காப்பீடு, அவர்களது குழந்தைகளுக்கு உயர்கல்வி உதவித் தொகை என அவர்களின் ஒட்டுமொத்த உயர்வுக்காகப் பாடுபடுவதுதான் #DravidianModel அரசு.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2026) திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைக்கும் விழாவில், தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுத் திட்டத்திற்காக உணவு கொண்டு செல்லும் வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ்.எம்.நாசர், மருத்துவர் மா. மதிவேந்தன், எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சந்திரன், வி.ஜி. ராஜேந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன், சுதர்சனம், கிருஷ்ணசாமி, கணபதி, துரை சந்திரசேகர், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்னும் பல நலத்திட்டங்களைச் செய்து தருவோம்! என்றும் தூய்மைப் பணியாளர்களுக்குத் துணையாக இருப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

**இது தொடர்பாக வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-**

இந்தியாவிற்கே வழிகாட்டியாக தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்பு திட்டம், உணவு வழங்கும் திட்டம், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டம், தொழில் தொடங்கிட மானியத்துடன் கடனுதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு விரிவுப்படுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2026) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தியாவிற்கே வழிகாட்டியாக தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்பு திட்டம், உணவு வழங்கும் திட்டம், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டம்,

தொழில் தொடங்கிட மானியத்துடன் கடனுதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு விரிவுப்படுத்தி தொடங்கி வைத்து, வெப்பக் காப்புப் பையில் வைக்கப்பட்ட உணவுக் கலன்களை தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கினார். மேலும், தூய்மைப் பணியாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் நலன் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007ஆம் ஆண்டு “தூய்மை பணியாளர் நல வாரியம்” அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு விபத்து மரண உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, கண்கண்ணாடி வாங்க நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், வீடு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தில் தற்போது 3,27,232 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### தொழில் வளர்ச்சியில் உலக நாடுகளோடு போட்டி போடும்

# தமிழ்நாடு இந்தியாவின் வாகன உற்பத்தி மையம்!

## ராணிப்பேட்டையில் டாடா மோட்டார்ஸ் நவீன வாகன உற்பத்தி ஆலையைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

ராணிப்பேட்டை, பிப். 10 -

**“தொழில் வளர்ச்சியில் உலக நாடுகளோடு போட்டி போடும் தமிழ்நாடு இந்தியாவின் வாகன உற்பத்தி மையமாகத் திகழ்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராணிப்பேட்டையில் டாடா மோட்டார்ஸ் நவீன வாகன உற்பத்தி ஆலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின் முதல் அலகு ரூ.900 கோடி செலவில் நிறுவப்பட்டு, திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :-

நம்முடைய அன்புக்குரிய சந்திரசேகரன் அவர்கள் முதலில் உரையாற்றுகின்றபோது, இந்த நாள் டாடா குழுமத்திற்கு ஒரு பொன்னாள் என்று சொன்னார். டாடா நிறுவனத்திற்கும், இங்கு இருக்கக்கூடிய பணியாளர்களுக்கும் ஒரு பொன்னாள் என்று பெருமையோடு, மகிழ்ச்சியோடு எடுத்துச் சொன்னார். உண்மைதான். ஆனால், ஒன்றை அவர் மறந்துவிட்டார்; எங்கள் தமிழ்நாட்டிற்கும் இது பொன்னாள். மன்னிக்கவும், நம்முடைய தமிழ்நாட்டிற்கும் இது பொன்னாள். குறிப்பாக, தமிழகத்தின் தொழில்துறைக்கும் இது ஒரு பொன்னாள்.

அந்த வகையில், சிப்காட் பனப்பாக்கத்தில், டாடா JLR நிறுவனத்தின் மேம்பட்ட பயணிகள் வாகன உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின், முதல் அலகு 900 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, ஆர். காந்தி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம். முனிரத்தினம், ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.பி. நந்தகுமார், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் மற்றும் நிறுவன நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ரூ.9,000 கோடி முதலீடு 5000 பேருக்கு வேலைவாய்ப்பு!**

டாடா குழுமம் தமிழ்நாடு மீது வைத்திருக்கும் நம்பிக்கை உள்ளபடியே பெருமையையும், மகிழ்ச்சியையும் நமக்கெல்லாம் அளிக்கிறது. அதுவும், 9 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கப்போகின்ற, இப்படி ஒரு சிறப்பான திட்டத்தை, இராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடங்கியதற்காக தமிழ்நாட்டின் முதலமைச்சராக என்னுடைய நன்றியை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டாடா குழுமத் தலைவர் சந்திரசேகரன் அவர்கள், இங்கு பங்கேற்றிருப்பது எங்கள் எல்லோருக்கும் கூடுதல் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது! உலகப் புகழ்பெற்ற நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் அவர் இருப்பது, அவருக்கு மட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டிற்கே அது மிகப் பெரிய பெருமை!

அவரே குறிப்பிட்டுச் சொன்னார், 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த அடிக்கல் நாட்டு விழாவில், “விரைந்து இந்தப் பணிகளை முடித்து திறப்பு விழாவிற்கும் நீங்கள் வர வேண்டும்” என்று மரியாதைக்குரிய சந்திரசேகரன் அவர்களிடம் நான் கோரிக்கை வைத்திருந்தேன். அதை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு இன்று அவர் நம்மிடையே இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பதற்கு மகிழ்ச்சி! அதற்காக மீண்டும் என்னுடைய நன்றியை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

இந்தியாவின் தொழில் முகங்களில் முக்கியமானது டாடா நிறுவனம். ஸ்டீல், I.T, ஏர்லைன்ஸ்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்